## தீர்த்தநீர் என்று அண்டாவில் இருந்து குடிநீரை தெளிப்பதா?

## வி.ஐ.பி. கலாச்சாரம்! தலைமை நீதிபதி அவமதிப்பு!

# மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்கு விழா அலங்கோலங்கள்!

## த.வெ.க. அரசுக்கு மார்க்சிஸ்ட் சு.வெங்கடேசன் எம்.பி. கடும் கண்டனம்!

மதுரை, செப். 22 -

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குடமுழுக்க விழா என்ற பெயரில் த.வெ.க. அரசு நடத்திய அலங்கோலங்களை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மதுரை சு. வெங்கடேசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு

மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா பதினேழு ஆண்டுகளுக்குப் பின்னர் நடந்தேறியுள்ளது. இவ்விழாவுக்கான அழைப்பிதழ் தொடங்கி இப்பெருவிழா நடந்தேறி முடிந்தது வரை எத்தனையோ கருத்துகளும் விமர்சனங்களும் விவாதங்களும் பொதுத்தளத்தில் தொடர்ந்து நடந்துவருவதைப் பார்க்கிறோம்.

**அழைப்பிதழில் பெயர்!**

**விழா அழைப்பிதழில் அறங்காவலர் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பெயர்கள் இடம்பெறாததைப்பற்றி பலரும் கேள்வி எழுப்பியிருந்தனர். அக்கட்டுரை எழுதப்பட்டு ஓரிரு நாள்களுக்குப் பின்னர்தான் எனக்கு அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றது. அதற்குள் நீதிமன்றம் வரை சென்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுவிட்டன.**

**அறநிலையத் துறையானது, அழைப்பிதழில் அறங்காவலர் குழுத் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களின் பெயர்களைப் போடாதது தவறு. அழைப்பிதழில் இடம்பெற்ற 36 பெயர்களில் 19பெயர்கள் அறநிலையத் துறை அதிகாரிகளின் பெயர்கள். இவ்வளவு பெயர்களைப் போடும்போது அறங்காவலர் குழுவினரின் பெயரைப் போடாதது அறிந்தே நிகழ்ந்த ஒன்று என்பது வெளிப்படையானது. திருப்பணியானது குறுகிய அரசியலுக்கான இடமன்று என்ற பொறுப்போடு அறநிலையத் துறை நடந்திருக்க வேண்டும்.**

அழைப்பிதழில் பெயர் இடம்பெறாதது மட்டுமன்று, பெயர் இடம்பெற்றதும் விவாதத்திற்குரிய மிகமுக்கிய விசயம் என்றே கருதுகிறேன். அழைப்பிதழில் 12 ஆன்மீகப் பெரியவர்கள், 9 ஆகமப் பண்டிதர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இப்பெருவிழாவுக்கான அடிப்படைப் பணிகளான கோபுரங்கள் மற்றும் கோவில் முழுமையையும் செப்பனிடும் திருப்பணியைச் செய்துமுடித்துள்ள ஸ்தபதிகளின்சிற்பிகளின்பெயர்கள் எதுவும் இடம்பெறவில்லை. எரியுண்ட வீரவசந்தராயர் மண்டபத்தை மறு உருவாக்கம் செய்து தந்துள்ள தலைமைச் சிற்பி உள்ளிட்ட யார் பெயரும் இடம்பெறவில்லை.

இத்திருப்பணிக்கான மொத்தச் செலவில், சரிபாதிச் செலவைச் செய்தவர்கள் கொடையாளர்கள். அவர்கள் யாருடைய பெயரும் இடம்பெறவில்லை.

இத்திருக்கோயிலுக்கு மரபுவழி முதலுரிமை கொண்ட மதுரை ஆதீனத்தின் பெயர் ஆறாவதாக இடம்பெற்றுள்ளது. தமிழ்ச்சைவசித்தாந்தத்தை ஏற்றுக்கொள்ளாத அத்வைத மடங்களான காஞ்சி காமகோடி, சிருங்கேரி சாரதா பீடாதிபதிகளின் பெயர்கள் முதன்மையாக இடம்பெற்றன.மக்கள் பிரதிநிதிகள் அனைவரின் பெயர்களும் இடம்பெற்றுஉள்ளன. மாவட்ட ஆட்சியரின் பெயரும் மாநகராட்சி ஆணையரின் பெயரும் இருந்தன; ஆனால், காவல்துறை அதிகாரிகளின் பெயர்கள் இடம் பெறவில்லை.

இவையெல்லாம் பெயர்கள் இடம்பெற்றது, பெறாதது சார்ந்த விவரங்கள். ஆனால் முக்கியமான கேள்வி, திருக்குட முழுக்கு நன்னீராட்டு விழா அழைப்பிதழில்மக்கள்பிரதிநிதிகள் பெயர்கள் ஏன் இடம்பெற வேண்டும்? அரசு அதிகாரிகளின் பெயர்கள் ஏன் இடம்பெற வேண்டும்? மடாதிபதிகளின் பெயர்கள் ஏன் இடம்பெற வேண்டும்?

திருக்குட முழுக்கு நன்னீராட்டு விழா என்பது சமயஞ்சார்ந்த சடங்கு. இதில் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டு வழிபட முடியும்; கலந்துகொண்டு சிறப்பிக்க முடியாது. அப்படியிருக்க, "கலந்துகொண்டு சிறப்பிப்பவர்கள்" என்ற பெயர்ப் பட்டியல் தேவையற்றது.

கோவில்களில் வருடம் முழுவதும் நடக்கிற சித்திரை திருவிழா, தெப்பத்திருவிழா போன்ற விழாக்களின் அழைப்பிதழ்களில் சமய நடைமுறை மட்டுமே இடம்பெறுகிறது. அதே போன்றே திருக்குட முழுக்கு நன்னீராட்டு விழா அழைப்பிதழும் இருக்க வேண்டும். அதே போன்று திருக்குட நன்னீராட்டு விழாவில் விழா நடக்கும் கோயிலுக்குத் தொடர்பற்ற மடத்துத் தலைவர்களின் பெயர்கள் ஏன் இடம்பெற வேண்டும்? அப்படி இடம்பெற சைவ, வைணவ, வேதாந்த மடத்துத் தலைவர்கள் அனைவரின் பெயரையும் போடுவதாக இருந்தால் அந்த எண்ணிக்கைக்கு எல்லை ஏது? குறிப்பிட்ட மடாதிபதிகளின் பெயரை மட்டும் போடுவதாக இருந்தால் அந்தத் தேர்வு யாருடையது என்ற கேள்வி தவிர்க்க முடியாததாகிறது. பெயர்விளங்க ஒளிர்தல் துறவுநிலையின் தத்துவச்சாரத்திற்கு எதிரானதென்றே ஆன்மீக மரபு போதிக்கிறது.

**குறைபாடுகள்!**

இந்த விழாவில் குறைபாடுகளே இல்லை, எல்லாம் சரியாகவே நடந்தது என்று யாரும் வாதிட முடியாது. குறைபாடுகளை நேர்மறையாக ஏற்றுக்கொள்வதும் அதிலிருந்து படிப்பினைகள் பெறுவதும்தான் முக்கியம். சில குறைபாடுகள் திட்டமிடலில் நடந்த தவறுகள். சில குறைபாடுகள் செயலாக்கத்தில் நிகழ்ந்தவை.

**1.தீர்த்தநீர் தெளித்தல்**

திருக்குட முழுக்கு விழா என்பதன் முக்கியச் சடங்கு வேள்வியில் உருவாக்கப்பட்ட சக்தியை கும்பங்களில் நீர்மூலம் சுமந்து சென்று கோபுரத்தின் மீதிருக்கும் திருக்குடங்களுக்கு நன்னீராட்டுதல்.

கோபுரங்களின் மீது நன்னீராட்டு முடிந்ததும் அங்கிருந்து தெளிக்கப்படும் இந்நன்னீர் துளிகளே பக்தர்கள் தீர்த்தமாக ஏற்கின்றனர். மதுரை திருக்குட முழுக்கு விழா முடிவுற்ற பின்னர் நான்கு கோபுரங்களின் எதிர் உள்ள வீதிகளில் குவிந்திருந்த மக்களின் மீது தீர்த்தநீர் எதுவும் தெளிக்கப்படவில்லை. இது பக்தர்களை கோபப்படுத்தியது. தாங்கள் புனிதமாக கருதும் ஒன்று தங்களுக்கு கிடைக்காததனால் ஏற்பட்ட ஆவேசத்தை வெளிப்படுத்தினர். பக்தர்களின் உணர்வு நியாயமானதே.

திருக்குட முழுக்குத் தீர்த்ததைத் தெளிக்கச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் குறித்து முன்னதாக நடந்த ஆய்வுக்கூட்டத்தில் நாங்கள் கேட்டபோது டிரோன் மூலம் தெளிக்க ஏற்பாடு உள்ளதாக கூறினர். ஆனால் அது நடைமுறையாகவில்லை. திருக்குட முழுக்கு விழா தொடங்கிய சிறிதுநேரத்தில் அம்மன் சந்நிதி கோபுரத்தின் மேல பறந்துகொண்டு இருந்த டிரோன் ஒன்று சிதைந்து விழுந்தது. அதனால் பதட்டமடைந்து இம்முயற்சி கைவிடப்பட்டதாகத் தெரிகிறது.

திருக்குட முழுக்கு நன்னீரைப் பக்தர்களுக்குத் தெளிக்கும் செயலின் சிறந்த உதாரணமாக 2023ஆம் ஆண்டு பழனி கோவில்திருக்குட முழுக்கு விழாவைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. அங்கு டிரோன் மூலம் தீர்த்த நீரையும் ஹெலிஹாப்டர் மூலம் பூக்களையும் பக்தர்கள் மேல் தூவ ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அம்முறை இங்கும் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும். அது பின்பற்றப்படாதது மட்டுமன்று, தீர்த்தநீர் தெளிக்கப்படாததால் கோபமடைந்த மக்களை அமைதிப்படுத்த அண்டாவில் இருந்த தண்ணீரை மக்கள்மீது தெளிக்கும் செயலில் காவல்துறையைச் சார்ந்த சிலர் ஈடுபட்டது கேலிக்கூத்தான ஒன்று.

**சித்திரைவீதிகளில் பக்தர்களை அனுமதிக்காதது!**

அதே போன்று சித்திரை வீதியில் பக்தர்களை முற்றாக அனுமதிக்காதது சரியான முடிவன்று. ஆடிவீதி கோவில் நிர்வாகத்திற்கானது. சித்திரைவீதி மாநகராட்சி நிர்வாகத்திற்கானது, இதில் உள்ள நிர்வாக முரண்களால் கடந்த காலங்களில் நிறையப் பிரச்சினைகள் ஏற்பட்டதுண்டு. அவற்றை முறியடித்துத்தான் நல்ல முடிவுகள் எடுக்கப்பட்டன. உதாரணமாக சித்திரைத் திருவிழாவின் போது கோவில்நிர்வாகம் சார்பில் சித்திரைவீதிகளின் நான்கு பக்கங்களிலும் முழுமையாகப் பந்தல் அமைக்கும் முடிவு ஏழு ஆண்டுகளுக்கு முன்பு எடுக்கப்பட்டது. இந்த முறை சித்திரைவீதி முழுவதையும் அடைக்கக் காவல்துறையின் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டு முடிவெடுக்கப்பட்டு உள்ளது. அது சரியான முடிவன்று. சித்திரைவீதியில் மக்களை திருக்குட முழுக்கு நிகழ்வைக் காண அனுமதித்திருக்க வேண்டும்.

**வி.ஐ.பி. கலாச்சாரம்!**

இரண்டாவது முக்கிய பிரச்சினை வி.ஐ.பி. கலாச்சாரம். லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்கும் விழாவில் அனைவரையும் திருக்குட முழுக்கு நன்னீராட்டின்போது கோயிலின் மேற்கூரைக்கு அனுமதிக்க வாய்ப்பில்லை. கோவில் மேற்கூரையின் இடவசதி, தாங்குந்திறன் இரண்டையும் பொதுப்பணித்துறை மதிப்பிட்டுக் கொடுத்த எண்ணிக்கையின் அடிப்படையில் 11 ஆயிரம் பேரை அனுமதிக்க நிர்வாகம் முடிவு செய்கிறது. எனவே 11 ஆயிரம் பேருக்கு பாஸ் கொடுக்க முடிவு செய்யப்பட்டது.

**அதில் இரண்டாயிரம் பாஸ் பொதுமக்களுக்காக குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது. மீதம் உள்ள 9 ஆயிரம் பாஸ்கள் யாரால் எந்த அடிப்படையில் பிரித்து தரப்பட்டது என்பதில் வெளிப்படைத்தன்மை தேவை. பாஸ் வழங்குவதை யார் தீர்மானித்தார்கள் என்ற கேள்விக்கு யாரும் பொறுப்பேற்கப் போவதில்லை. அந்த வெளிப்படைத் தன்மை இல்லாத வரை அரசின் மீதான குற்றச் சாட்டு அகலாது.**

பாஸ் எந்த அடிப்படையில் பிரித்துத் தந்தாலும் அதன் மீது விமர்சனம் வரத்தான் செய்யும். ஆனால் அடிப்படையே வெளியில் தெரியாத மர்மமாக இருந்தால் கடுங்குற்றச்சாட்டுகள் வரத்தான் செய்யும். குறிப்பாக கோயிலுக்கு பொறுப்பு அதிகாரியை விழாவுக்கு முந்தைய இரண்டு நாள்களில் தொடர்புகொள்ள முடியவில்லை. அவரது போன் செயலில் இல்லை. எங்களது எந்த ஆய்வு நிகழ்விலும் அவர் இல்லை. நாடாளுமன்ற உறுப்பினராக எனக்கு தரப்பட வேண்டிய "பேட்ஜ்" தரப்படவில்லை. நான் பேட்ஜ் அணியாமல்தான் விழாவில் பங்கேற்றேன். அதை ஒரு பிரச்சினையாக நான் கருதவில்லை. இவ்வளவு பெரியநிகழ்வில் இது போன்ற கவனக்குறைவு இருக்கத்தான் செய்யும். ஆனால் அதனைக் கூப்பிட்டுக் கேட்கவேண்டியவரை யாராலும் தொடர்பு கொள்ள முடியாதது முக்கிய பிரச்சினை.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததால், பேட்ஜ் இல்லாவிட்டாலும் காவலர்கள் என்னை உள்ளே அனுமதித்துவிட்டனர். ஆனால் இப்பெரும் நிகழ்வுக்கு நன்கொடை வழங்கிய அனைவருக்கும் பாஸ் போய்ச்சேர்ந்ததா? கிடைக்காதவர்கள் என்ன செய்திருப்பார்கள்? யாரைத் தொடர்பு கொண்டு கேட்டிருப்பார்கள் என்று யோசித்தால் கவலையே மிஞ்சுகிறது.

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி உள்ளிட்டவர்களுக்கு அவமதிப்பு நடந்துள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. பல லட்சம் பக்தர்கள் காத்திருக்க 11ஆயிரம் பேர் மட்டும் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர். திருக்குட முழுக்கு முடிந்தவுடன் கோயிலின் மேற்கூரையிலிருக்கும் அந்த 11ஆயிரம் பேரில் இருந்து சுமார் இரண்டாயிரம் பேர் மட்டும் சன்னதியில் வழிபட அனுமதிக்கப்படுகின்றனர். சன்னதிக்கு முன் உள்ள மண்டபத்தில் அதிகபட்சம் நூறு பேர் இருக்கலாம். அப்படியென்றால் 2000 பேரில் முண்டியடித்துக்கொண்டு போகிற 100 பேருக்கு மட்டுமே முதல்தரிசனம் கிடைத்திருக்கும். மற்றவர்கள் அதன் பின்னரே வழிபாடு செய்திருப்பர். முண்டியடித்துச் சென்றால் அங்கே என்ன நடக்கும் என்பதை நம்மால் எளிதில் யூகிக்க முடியும்.

**உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சார்ந்த பிரச்சினை யாக ஊடகங்களில் செய்தி வெளிவந்த பின்னணியி லாவது இப்பிரச்சனைக்கு முற்றுபுள்ளி வைக்க அரசும் நீதித்துறையும் முன்வர வேண்டுமெனக் கோருகிறேன். திருக்குட முழுக்கு நிகழ்வை கோயிலின் மேற்கூரையில் அமர்ந்து பார்த்தவர்களே மீண்டும் கருவறை வழிபாட்டிலும் பங்கேற்பது நியதியா? லட்சக்கணக்கான மக்கள் கோயிலுக்கு வெளியில் நின்றுகொண்டிருக்கும்போது பாஸ்பெற்று உள்ளே சென்றவர்கள் இரண்டு வகையான முன்னுரிமைகளையும் பெறுவது சரியன்று.**

**மூன்று முக்கியப் பிரச்சினைகள்**

இந்த விழாவில், மூன்று விசயங்கள் முக்கிய பிரச்சினையாக இருந்தன. நன்னீராட்டு தீர்த்தம் தெளிக்கப்படாதது, சித்திரை வீதியில் மக்களை அனுமதிக்காதது, பொதுவழிபாடு பத்து மணிக்கு மேல் என தீர்மானித்தது.

தீர்த்தம் தெளிக்க தெளிவான திட்டமிடல் செய்யப்படவில்லை.

சுதந்திரத்திற்கு பின்னர் 1953ஆம் ஆண்டு பி.டி. இராஜன் தலைமையிலான குழு மிகச்சிறப்பாக குடமுழுக்கை நடத்தியுள்ளது. அத்திருப்பணிக்குழுவால் அம்மனுக்கு வைரகிரீடம் உருவாக்கி தரப்பட்டது. அதே போன்று 1974இல் லெ. நாராயணன் செட்டியார் தலைமையிலான குழுவினரால் முன்னதன் தொடர்ச்சியாக சிறப்பாக குடமுழுக்கை நடத்தியுள்ளனர். இக்குடமுழுக்கை முன்னிட்டு வெளியிடப்பட்ட மலர், கோவில் வரலாற்றுக்கு சூட்டப்பட்ட கிரீடங்களில் ஒன்று. இப்பணிக்காக இக்குழுவினர் என்றென்றும் நினைவு கூரப்படுவர்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



தூத்துக்குடி மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் ஜான்சிராணி இல்ல விழாவில் கலந்து கொண்டு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பி.கீதாஜீவன் வாழ்த்தினார். உடன் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்தசேகரன், நேர்முக உதவியாளர் மணி, பகுதி செயலாளர் மேகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தாராபுரம் இடைத் தேர்தலில் வாக்குச் சேகரிக்கச் சென்ற

# த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவுக்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்பு!

## பிரச்சாரம் செய்ய முடியாமல் திரும்பிச் சென்றார்!

குண்டடம், செப். 22 -

குண்டடம் கிராம பகுதிகளில் வாக்குச் சேகரிக்கச் சென்ற, த.வெ.க. வேட் பாளருக்கு கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் பிரச்சாரம் செய்ய முடியாமல் திரும்பி சென்றார்.

திருப்பூர் மாவட்டம் தாரா புரம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் த.வெ.க. சார்பில் சத்தியபாமா போட்டியிடுகிறார். இவர் ஏற்கனவே அ.தி.மு.க. சார்பில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட்டு, வெற்றி பெற்று எம். எல்.ஏ. வாக ஆனார். பின்னர் பின் 'எம்.எல்.ஏ.வாக ஆன பதவியை ராஜினாமா செய்து விட்டு த.வெ.க.வில் இணைந்தார். தற்போது அவரே த.வெ.க. சார்பில், போட்டியி டுகிறார். இதையடுத்து அவர் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குண்டடம் கிராம பகுதிகளில் பிரச்சாரம் செய்து வருகிறார்.

நேற்று குண்டடத்தை அடுத்த தும்ப லப்பட்டி, நந்தவனம் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் வாக்காளர்களிடம் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். தொடர்ந்து வேறு வேடம்பாளையம் பகுதியில் பிரச்சாரம் செய்ய சென்றபோது, அந்த கிராம மக்கள் வேட்பாளரை முற்றுகையிட்டு பல்வேறு கேள்விகளை எழுப்பினர்.

அப்போது, தங்கள் பகுதியில் கடுமையான வறட்சி நிலவி வருவதாகவும், பி.ஏ.பி. திட்டத்தின் மூலம் தண்ணீர் வழங்கப் படவில்லை. அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விவசாயிகளின் பயிர்க்கடன் தள்ளுபடி தொடர்பாக தேர்தல் வாக்குறுதிகள் நிறை வேற்றப்படவில்லை என குற்றம்சாட்டினர். இந்த கோரிக்கைகள் நிறை வேற்றாத நிலையில், மீண்டும் த.வெ.க.வுக்கு வாக்கு கேட்டு எப்படி வந்தீர்கள்?" என வேட்பாளரிடம் பொதுமக்கள் சரமாரியாக கேள்வி எழுப்பினர்.

**திரும்பிச் சென்றார்**

இதற்கு பதிலளித்த வேட் பாளர் சத்தியபாமா, 'நான் ஏன் த.வெ.க.வில் இணைந்தேன்" என தெரிவித்தார். ஆனால் கிராம மக்கள் 'நாங்கள் உங்கள் நடவடிக்கைகள் குறித்து கேள்வி கேட்கிறோம். । ஆனால் நீங்கள் எங்களுக்கு எழுதிக் கொடுத்த பதிலை படித்து கொண்டிருக்கிறீர் கள்' என்றனர். இதனால் கிராம மக்களுக்கும், வேட்பாளருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனால் ஆத்திரம் அடைந்த கிராம மக்கள் இங்கு பிரச்சாரம் செய்ய வேண்டாம், சத் தியபாமா ஒழிக என முழக்க மிட்டனர். இதனால் அப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

அங்கு பாதுகாப்புப்பணியில் இருந்த போலீசார் கிராம மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி சமாதானப்படுத்த முயன்றனர். ஆனால், சமாதானத்தை ஏற்காமல் தொடர்ந்து த.வெ.க. வேட்பாளருக்கு எதி ராக முழக்கமிட்டனர். இதனால் அப்பகுதியில் பிரச்சாரத்தை தொடர முடியாத நிலையில், வேட்பாளர் சத்தியபாமா அங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

## மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்! சினிமாவில் பிளாக் டிக்கெட் விற்ற மாதிரி டோக்கன் விற்பனை!

# அவரைப் பார்த்தார், இவரைப் பார்த்தார்! இதற்குத்தானா விஜய் லண்டன் போனார்?

## அண்ணாமலை பகிரங்க குற்றச்சாட்டு!

மதுரை, செப். 22 -

மீனாட்சி அம்மன் கோயில் கும்பாபிஷேகத்திற்கு சினிமாவில் பிளாக் டிக்கெட் அடிச்சு விற்கிற மாதிரி, டோக்கன்களை த.வெ.க. அரசு விற்பனை செய்ததாக அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.

மதுரையில் 'வீ தி லீடர்ஸ்' அமைப்பு சார்பில் வைகை ஆற்றைத் தூய்மை செய்யும் பணி நடந்தது. இதில், அமைப்பின் தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர். இந்நிகழ்ச்சிக்கு பிறகு அமைப்பின் சார்பிலான கூட்டத்தில் பங்கேற்று அண்ணாமலை பேசியதாவது:

சோழவந்தான் தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. கருப்பையா, சட்டப்பேரவையில் ஜல்லிக்கட்டு இளைஞர்களை சீரழிக்கிறது என்று பேசியுள்ளார்.

த.வெ.க. தேர்தல் அறிக்கையில் ஜல்லிக்கட்டை சர்வதேச போட்டியாக மாற்றுவோம் என வாக்குறுதி அளித்துள்ள நிலையில், அக்கட்சியின் எம்.எல்.ஏ. வேறு பட்ட கருத்தை தெரிவித்திருப்பது முரண்பா டாக உள்ளது. முதல்வர் விஜய் அந்தப் பேச்சை அங்கேயே தடுத்து நிறுத்தி யிருக்க வேண்டும். ஜல்லிக்கட்டு நடப்பதால்தான் நாட்டு மாடுகள் வளர்க்கும் எண்ணம் பலருக்கும் ஏற்படுகிறது. இதுபோன்ற கருத்துகளை பேச வேண்டாம்.

**தீர்த்தம் யாருக்கு தெளித்தார்கள்?**

இந்து சமய அறநிலையத்துறை எடுக்கப்பட வேண்டும். மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நடந்து முடிந்த கும்பாபிஷேகமே இதற்கு சாட்சி. த.வெ.க. அரசு கும்பாபிஷேகத்தை எப்படி நடத்தினார்கள்? சினிமாவில் பிளாக் டிக்கெட் அடிச்சு விற்பதைப்போல விற்று ள்ளனர். பச்சை டோக்கன் வாங்கினால் இங்கே, சிவப்பு கலர் வாங்கினால் அங்கே என்று. யார் உட்கார்ந்திருந்தார்கள்? விஐபிக்கள் மட்டும்தான் உட்கார்ந்திருந்தனர். மதுரையின் மக்கள் எங்கிருந்தீர்கள்? விஐபிகளின் வண்டியை பார்க்கிங் செய்யவா மாடவீதி? தீர்த்தம் யாருக்கு தெளித்தார்கள்? சிலருக்கே தெளித்தனர்.

மற்றவர்களுக்கு தெளித்தது தீர்த்தமல்ல. தண்ணீர். கையில் கொடுத்த தண்ணீரை தெளிக்கவா போலீஸ் இருக்கிறது? தியேட்டரில் படம் பார்க்கச் சென்றால், அடுத்தவர் செல்போன் அடித்தால் பிரச்சினைதான். அதற்காக தியேட்டரில் எல்லோரது செல்போனையும் பறிக்கலாமா? ஆனால் தவெக அரசு கோயிலில் எல்லாருடைய செல்போனையும் பறிக்கிறது.

இது என்ன நியாயம்? நீங்கள் இந்தமாதிரி செய்தால் கோயிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கையே குறைகிறது. அவர்கள் கோபுரத்தை பார்த்து கும்பிட்டு போய் விடுவார்கள். எதற்கு செல்போனுக்கு டோக்கன் என்று நினைப்பார்கள்.

அவரை பார்த்தார், இவரைப் பார்த்தார் இவர் எட்டி பார்த்தார்: இதற்குதானா விஜய் லண்டன் பயணம்?

விஜய் லண்டன் பயணம் குறித்து அண்ணாமலை பேசும்போது கூறியதாவது: லண்டன்ல எதுவுமே இல்லீங்க. அங்கே போனாலும் இந்தியாவில் உள்ள அதே துணை நிறுவனத்திற்குத்தான் பணம் கொடுக்கப்போறோம். அறிவார்ந்த தமிழ் சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டும். லண்டனை விட இந்திய நாட்டின் பொருளாதாரம் பெரியது. இந்தியா 2008ல் பொருளாதாரத்தில் ஒரு டிரில்லியன் இருந்தது. அப்போது லண்டன் 3 டிரில்லியன் இருந்தது.

முதல்வர் விஜய் லண்டனுக்கு போனதை பற்றியே பேச நான் விரும்பவில்லை. நான் பேசுவது முதல்வர் லண்டனுக்கே போக வேண்டாம் என்று பேசுகிறேன். லண்டனை பொறுத்தவரை கடந்த 10 ஆண்டுகளில் 7 பிரதமர்கள் மாறி இருக்கின்றனர். ஏனெனில் அங்கு நிலையற்ற பொருளாதாரம். எனவே, மக்கள் பிரதமரை மாற்றுகின்றனர். தமிழ்நாடு அரசு இந்த வேலையை எல்லாம் விட்டு விட வேண்டும்.

இந்தியாவில் தொழிலதிபர்களிடம் பேசி முதலீட்டை ஈர்க்கலாம். லண்டனில் மஹிந்திரா உள்ளிட்ட இந்திய நிறுவ னங்கள் தான் அதிகப்படியான பணம் முதலீடு செய்கிறது. கூகுளில் கடந்த 5 ஆண்டுகளில் எத்தனை இந்திய நிறுவனங்கள் அங்கு முதலீடு செய்து இருக்கிறார்கள் என்று பாருங்கள். லண்டன், நியூயார்க், சிகாகோ, சான் பிரான்சிஸ்கோ, சிங்கப்பூர் உள்ளிட்ட வெளிநாட்டு நகரங்களுக்கு செல்வதை விட தமிழகத்தின் உள்ளூர் பொருளாதாரத்தை ஊக்கப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## சிங்கம்புணரியில் பூட்டிஇருந்த

# வீட்டை உடைத்து 30 பவுன் நகை ரூபாய் ஒரு லட்சம் துணிகரகொள்ளை!

## மக்கள் அதிர்ச்சி!

சிவகங்கை. செப். 22 -

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புனரி நகர் சந்திவீரன் கூடத்தில் வசித்து வருபவர் திருமதி அலமேலு. இவரது கணவர் ஜெயபால் ஏற்கனவே இறந்துவிட்டார். இவர் தனது மகன் ஓம் குமாருடன் வசித்து வருகிறார். மற்றொரு மகன் வசந்த பெருமாள் அவரது மனைவியுடன் அருகில் உள்ள வீட்டில் வசித்து வருகிறார்.

இந்த நிலையில் வசந்த பெருமாளின் மனைவிக்கு தேனியில் குழந்தை பிறந்துள்ளது .அந்த குழந்தையை பார்ப்பதற்காக அலமேலு கடந்த 14ஆம் தேதி வீட்டை பூட்டிவிட்டு தேனிக்கு சென்று விட்டார். ஓம் குமாரும் வெளியூர் சென்று விட்டார் இந்த நிலையில் ஓம் குமார் நேற்று முன்தினம் இரவு வீட்டிற்கு வந்துள்ளார். வீட்டிற்கு வந்ததும் வீட்டின் கதவு திறக்கப்பட்டு பூட்டு உடைக்கப்பட்டதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

இது குறித்து சிங்கம் புணரி போலீசில் புகார் செய்தார். சிங்கம்புனரி போலிசார் வீட்டிற்கு வந்து சம்பவம் நடைபெற்ற இடத்தை பார்வையிட்டார்கள். வீட்டில் பீரோ உடைக்கப்பட்டு பீரோவில் இருந்த 30பவுன் தங்க நகைகள், ரூபாய் ஒரு லட்சம்ரொக்கப் பணம் கொள்ளையடிக்கப்பட்டது தெரியவந்தது.

இது குறித்து சிவகங்கையில் இருந்து மோப்பநாய் லோகி வரவழைக்கப்பட்டது. மோப்பநாய் சம்பவம் நடைபெற்ற வீட்டில் இருந்து சிங்கம்புணரி நான்கு வழி சாலை வரை. சென்றது இது தொடர்பாக அப்பகுதியில் சிசிடிவி கேமராக்களை போலீசார் ஆய்வு செய்து வருகிறார்கள். மேலும் தடய அறிவியல் கைரேகை நிபுணர்கள் தடயங்களை பரிசோதனக்காக எடுத்து சென்று உள்ளார்கள். இந்த கொள்ளை தொடர்பாக சிங்கம்புணரி நகர் போலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் . அப்பகுதியில் நடைபெற்ற கொள்ளை சிங் கம்புனரி நகரில் மிகவும் பயம் கலந்த அதிர்ச்சியினை ஏற்படுத்தி உள்ளது.